**செய்தி வெளியீடு எண். 134** **நாள்: 08.03.2018**

**2017-2018-ஆம் ஆண்டிற்கான தொழிற்பழகுநர்களுக்கான ஆள் சேர்ப்பு முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தொழிற்பயிற்சி தேர்ச்சி பெற்றவர்கள் (NCVT, SCVT & CoE passed out trainees), பள்ளிக் கல்வி தேர்ச்சி பெற்றவர்கள் (எட்டாம் வகுப்பு தேர்ச்சி / பத்தாம் வகுப்பு தேர்ச்சி) ஆகியோர் நலன் கருதி அவர்களை தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக சேர்க்க அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூரில் 10.03.2018 அன்று நடைபெறவுள்ளது.

பிரபல முன்னனி பெரு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களாக பணியமர்த்தப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படும். இதன் மூலம் இவர்கள் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறுவதற்கான தேர்வு எழுதிடலாம்.

திருவள்ளுர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த தகுதியான நபர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறாார்கள்.

மேலும், விவரங்களுக்கு அம்பத்துார், அரசினா் தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர் / முதல்வரை நேரடியாகவோ அல்லது தொலைபேசி 044–26252453 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**